

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் திருமுல்லைவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில் அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மிதி வண்டிகளை சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றிக் குழு தலைவர்கள் ஜெயபிரகாஷ், கமலஜோதிதேவேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

### சென்னை மாநகராட்சி:

# தூய்மைப் பணியாளர்கள் வாரிசுதாரர்களுக்கு மடிக் கணினி!

## மேயர் பிரியா வழங்கினார்! துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, ஆக. 4-

பெருநகர சென்னை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் உர்பேசர் சுமீத் நிறுவனத்தில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு உயர்கல்விக்கு உதவிடும் வகையில் அந்நிறுவனத்தின் சார்பில்

இலவச மடிக்கணினிகளை மேயர் திருமதி ஆர். பிரியா வழங்கினார்.

பெருநகர சென்னை மாந கராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் உர்பேசர் சுமீத் நிறுவனத்தில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு உயர்கல்விக்கு உதவிடும் வகையில் அந்நிறுவனத்தின் சார்பில் "கல்வி பாலம்" என்ற திட்டத்தின் கீழ் இலவச மடிக் கணினிகளை மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் நேற்று (03.08.2023) ஆழ்வார்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் உர்பேசர் சுமீத் நிறுவனமானது, அந்நிறுவனத்தில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் வாரிசுதாரர்களின் உயர் கல்விக்கு வழிவகை செய்திடும் வகையில் "கல்வி பாலம்" என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், தூய்மைப் பணியாளர்களின் வாரிசுதாரர்களில் 12ஆம் வகுப்பு பயிலும் 3 மாணவர்களுக்கு இலவச மடிக்கணினிகள் மற்றும் 5 மாணவர்களுக்கு கையடக்கக் கணினிகள் (Tab), 10ஆம் வகுப்பு பயிலும் 2 மாணவர்களுக்கு 2 கையடக்கக் கணினிகளையும் (Tab) இன்று வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, தூய்மைப் பணியாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் சிஷ்யா பள்ளி மாணவியர் எழுதிய "Developing Stories" என்ற புத்தகத்தை மாண்புமிகு மேயர் அவர்கள் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர்மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர் லால் குமாவத், தலைமைப் பொறியாளர் என்.மகேசன், உர்பேசர் சுமீத் தலைமை நிருவாக அதிகாரி மஹ்மூத் சைட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டத்தில்

# கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் 3,59,315 விண்ணப்பங்கள் பதிவு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

திருப்பூர், ஆக. 4 -

திருப்பூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் விண்ணப்பம் பதிவு மையங்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு 24.07.2023 முதல் இன்று வரை 3,59,315 விண்ணப்பங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளது என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் தெரிவித்தார்

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, காங்கேயம், தாராபுரம், பல்லடம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் விண்ணப்பம் பதிவு மையங்களை 24.07.2024 முதல் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருப்பூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு விண்ணப்பப் பதிவு முகாம்கள் இரண்டு கட்டமாக நடத்தப்படுகிறது. முதல்கட்டமாக நடைபெறும் முகாம்களுக்கு கடந்த 20.07.2023 முதல் 23.07.2023 வரை நான்கு நாட்கள் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் டோக்கன்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் நேரடியாக சென்று வழங்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (24.07.2023) அன்று தருமபுரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் விண்ணப்பம் பதிவு முகாமினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் முதற்கட்டமாக 24.07.2023 அன்று முதல் தொடங்கி 04.08.2023 வரை திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 1 மற்றும் மண்டலம் 2 ஆகிய பகுதிகளுக்குட்பட்ட 30 வார்டுகளிலும், திருப்பூர் மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் 265 ஊராட்சிகளில் விண்ணப்பப் பதிவு முகாம்கள் நடைபெற்று வருகிறது. முதல்கட்டமாக 24.07.2023 அன்று 57,461 விண்ணப்பங்களும், 25.07.2023 அன்று 78,643 விண்ணப்பங்களும், 26.07.2023 அன்று 79,143 விண்ணப்பங்களும், 27.07.2023 அன்று 71,384 விண்ணப்பங்களும், 28.07.2023 அன்று 49,086 விண்ணப்பங்களும், 29.07.2023 அன்று 23,598 விண்ணப்பங்களும், என மொத்தம் 3,59,315 விண்ணப்பங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் 1,135 நியாயவிலைக் கடைகளில் 8,18,344 குடும்ப அட்டை தாரர்கள் உள்ளனர். கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக 827 நியாய விலை கடைகளுக்குட்பட்ட 5,34,460 குடும்ப அட்டைதாரர்களுக்கான விண்ணப்பப் பதிவு செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக, 308 நியாய விலை கடைகளுக்குட்பட்ட 2,83,884 குடும்ப அட்டைதாரர்களுக்கான விண்ணப்பப் பதிவு செய்யும் பணிகள் 05.08.2023 முதல் 16.08.2023 வரை திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 3 மற்றும் மண்டலம் 4 ஆகிய பகுதிகளுக்குட்பட்ட 30 வார்டுகளிலும், 6 நகராட்சி பகுதிகளிலுள்ள 147 வார்டுகளிலும் மற்றும் 15 பேரூராட்சிகளுக்குட்பட்ட 233 வார்டுகளிலும் இரண்டாம் கட்டமாக விண்ணப்ப பதிவு முகாம்கள் நடைபெறும். இந்த விண்ணப்பப் பதிவு முகாம்கள் பொது மக்களின் வசதிக்கேற்ப அந்தந்த பகுதியில் உள்ள நியாய விலைக்கடை அருகில் உள்ள அரசு அலுவலக கட்டடங்கள், சமுதாய நலக்கூடங்கள் மற்றும் பள்ளிகளில் விண்ணப்ப பதிவு முகாம்கள் நடைபெறும். இதற்காக விண்ணப்பப் பதிவு முகாம்களில் இல்லம் தேடிக்கல்வி தன்னார்வலர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர் என அமைச்சர் தெரிவித்தார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவு நாள்!

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் வேண்டுகோள்!

செஞ்சி, ஆக. 4 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 7.8.2023 அன்று விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பேரூராட்சி நகராட்சி பகுதிகளில் நிர்வாகிகள் அமைதி ஊர்வலமாக சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்த வேண்டுமென கழகநிர்வாகிகளுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சருமான செஞ்சி கே. எஸ் .மஸ்தான் வேண்டுகோள் விடுத்துள்ளார்:



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள் என்பது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞர் தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் 5 முறை முதலமைச்சராக இருந்து தந்தை பெரியாருடைய சமூகநீதி கொள்கைக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், தற்போது தமிழகத்தை முதன்மை மாநில மாகமாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் தான் என்பது வரலாற்றுப் பதிவாகும். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாஅவர்களின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை மனதிலும், தோளிலும், தமது வாழ்நாள் முழுவதும் சுமந்து சமுதாயத்திற்கும் மனித நேயத்திற்கும் சமூக நீதிக்கும் பல்வேறுநலிந்தவர்களின் வாழ்க்கை தரம் உயர்வதற்கும்வாழும் வள்ளுவனாக, சமத்துவபெரியாராக வாழ்ந்து காட்டியவர்முத்தமிழ் அறிஞர் கலைஞர்இன்றைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு அவர் விட்டுச் சென்றபணிகளை தொடர்ந்து செயல்படுத்த அடித்தளம் அமைத்துக் கொடுத்த செம்மொழி காவலர் கலைஞர் அவர்கள்

எத்தனையோ சமூக நீதிக்கான திட்டங்களை ஏழை எளியவர்களுக்கு என பல்வேறு நலத் திட்டங்கள் ஆகியவற்றை தன்னுடைய ஆட்சிக் காலத்திலேயே உருவாக்கி நடைமுறைப்படுத்திஇந்தியத் துணைக் கண்டத்திற்கு கலங்கரை விளக்கமாக செயல்பட்ட அந்த தன்னிகரில்லா தலைவரின் 5ஆம் ஆண்டு நினைவுநாள் வரும் 7ஆம் தேதி கடைபிடிக்கப் படுகிறது

இதையடுத்து விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் அனைத்து நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலும் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து நிர்வாகிகளும் கழக செயல் வீரர்களும்அமைதி ஊர்வலமாகச் சென்று தமிழின தலைவர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்த வேண்டும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கோடம்பாக்கம், அடையாறு மண்டலங்களில்

# 24 மணிநேரமும் குடிநீர் வினியோகம்!

## பொதுமக்களுக்கு சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,ஆக.4-

கோடம்பாக்கம் மற்றும் அடையாறு மண்டலங்களில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் திட்டச் செயலாக்கத்திற்கு தேவையான விவரங்களை, பொதுமக்கள், தங்கள் வீடுகளுக்கு விவரங்களை சேகரிக்க வருகை தரும் ஒடிசா அரசின் நீர் நிறுவனத்தின் (WATCO) பணியாளர்களிடம் தெரிவிக்கவேண்டும்.

இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB) மற்றும் ஒடிசா மாநில நீர்க் கழகம் (Water Corporation of Odhisa (WATCO) இடையே 20.07.2023 அன்று கையெழுத்தானது. இத்திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக திட்ட மேலாண்மை ஆலோசகராக ஒடிசா மாநில நீர்க் கழகத்திற்கு (WATCO) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் (CMWSSB) நியமிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இப்பணிகளை மேற்கொள்வதற்காக விரிவான திட்ட அறிக்கை மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் தயாரித்து வழங்கிடும் பணிகளை ஒடிசா மாநில நீர்க் கழகத்தினர் (WATCO) மேற்கொள்வார்கள். இத்திட்டத்தின்கீழ், பழுதடைந்துள்ள பழைய குடிநீர்க் குழாய்களை மாற்றியமைத்து, விடுபட்ட தெருக்களில் புதிதாக குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு எண்.127 முதல் 142க்குட்பட்ட கோடம்பாக்கம், வடபழனி, மேற்கு மாம்பலம், தியாகராயர் நகர், சி.ஐ.டி நகர், சைதாப்பேட்டை, ஜாபர்கான் பேட்டை, அசோக் நகர், கே.கே.நகர், எம்.ஜி.ஆர். நகர், நெசப்பாக்கம்(பகுதி), சாலிகிராமம், விருகம்பாக்கம், கோயம்பேடு ஆகிய பகுதிகள் மற்றும் அடையாறு மண்டலம், வார்டு எண்.168 முதல் 180க்குட்பட்ட ஈக்காட்டுதாங்கல், சைதாப்பேட்டை, கோட்டூர்புரம், இந்திரா நகர், கிண்டி, அடையாறு, பெசன்ட் நகர், வேளச்சேரி, தரமணி மற்றும் திருவான்மியூர் ஆகிய பகுதிகளுக்கு தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்தி 24 மணி நேரமும் குடிநீர் தங்குதடையின்றி விநியோகிக்கப்படும்.

எனவே, பொதுமக்கள் இத்திட்டச் செயலாக்கத்திற்கு தேவையான விவரங்களை சேகரிக்கவரும் களப் பணியாளர்களிடம் விவரங்களை வழங்கி ஒத்துழைப்பினை நல்கிட வேண்டும். என்று சென்னை குடிநீர்வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

### நகர்மன்றத் தலைவர் க.இராஜேந்திரன் பங்கேற்பு

# மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியருக்கு மிதிவண்டி!

## அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்

கடலூர், ஆக. 4 -

தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா, கடலூர் மாவட்டம் ,பண்ருட்டி நகராட்சியில் சுப்பராய செட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் வழங்கினார்.

பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் க. இராஜேந்திரன் கலந்துகொண்டு விலையில்லா மிதி வண்டியை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர்கள் தணிகை செல்வம். ,ஆனந்தி சரவணன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் கதிர்காமன்., நகர அவைத் தலைவர் ராஜா., நகர பொருளாளர் ராமலிங்கம். நகர வழக்கறிஞர் அணி பரணி சந்தர். நகர மன்ற உறுப்பினர்கள் கௌரி அன்பழகன், சண்முகவள்ளி பழனி, முகமது அனிபா, முன்னாள் நகர மாணவரணி குணா, ,முன்னாள் மாவட்ட மாணவரணி ராம்குமார், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி. தஷ்ணாமூர்த்தி,பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் லோகநாதன் ,இளைஞரணி அமைப்பாளர் சம்பத் ,துணை அமைப்பாளர்கள் பாலச்சந்தர், பார்த்திபன் ,ராஜா , மற்றும் பண்ருட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பூவராக மூர்த்தி, சுப்பராய செட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி தாளாளர் மாதவன், தலைமை ஆசிரியர், ஆசிரியைகள் ,மாணவ, மாணவிகள் ,மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்

### உக்ரைன் முக்கிய துறைமுகம் மீது

# ரஷியா டிரோன் தாக்குதல்!

40 ஆயிரம் டன் தானியம் நாசம்

மாஸ்கோ, ஆக.4-

ரஷியா, தனது அண்டை நாடான உக்ரைனை 2022, பிப்ரவரி மாதம் ஆக்ரமித்தது. இதனை எதிர்த்து உக்ரைன், அமெரிக்கா உட்பட பல மேற்கத்திய நாடுகளின் பொருளாதார மற்றும் ஆயுத உதவிகளை கொண்டு ரஷியாவை தீவிரமாக எதிர்த்து வருகிறது. இதில் இரு தரப்பிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டு பல அப்பாவி பொதுமக்கள் பலியாகினர். ரஷிய உக்ரைன் போர் தற்போது 525 நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து வருகின்றது.

இந்நிலையில், உக்ரைன் ருமேனியா எல்லை வழியாக ஓடும் டானுபே ஆற்றின் அருகே உள்ள இஸ்மாயில் துறைமுகத்தை (port of Izmail) ரஷியா டிரோன்கள் மூலம் தாக்கியது. இதனால் அத்துறைமுகத்திலிருந்து தானியங்களை ஏற்றி செல்லும் சரக்கு கப்பல்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இஸ்மாயில் துறைமுகத்திலிருந்து தானியங்களை ஏற்றி செல்ல கப்பல்கள் அத்துறைமுகத்திற்கு உள்ளே வர இருந்த போது இந்த தாக்குதல் நடைபெற்றது.

"ஆப்பிரிக்கா, இஸ்ரேல் மற்றும் சைனா ஆகிய நாடுகளுக்காக தானியங்களை ஏற்றி செல்ல கப்பல்கள் வர இருந்தன. இத்தாக்குதல்களால் 40 ஆயிரம் டன் தானியங்கள் சேதமாகியிருக்கிறது.

### கும்முடிப்பூண்டி தொகுதி ஊத்துக்கோட்டை

# மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியருக்கு மிதிவண்டி!

## மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ வழங்கினார்.

திருவள்ளூர், ஆக. 4 -

திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் உள்ள அரசு ஆண்கள் மற்றும் பெண்கள்; மேனிலைப் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு 2022 -23ம் ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தலைமையாசியர்கள்; ந.பா.வித்யாவதி, செந்தில்வேலன் வரவேற்புரை நிகழ்த்தினர். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்கள் எ.சம்சுதின், மு.தமிழ் செல்வன் முன்னிலை வகித்தனர்.

விழாவில் பொன்னேரி கல்வி மாவட்டத்தில் உள்ளடங்கிய மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 7189 மிதி வண்டிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் 366 மிதி வண்டிகளை ஊத்துக்கோட்டை பள்ளி மாணவ மாணவியருக்கு மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன், வழங்கி சிறப்புரையாற்றினார்.

விழாவில் ஜெ.மூர்த்தி, ஏ.வி.ராமமூர்த்தி, எஸ். ரமேஷ், பா.செ.குணசேகரன், அபிராமி குமரவேல், அர்.குமரவேல்> அப்துல் ரஷித் டி.சண்முகம்,எல்.எஸ் சுரேஷ், எ.சீனிவாசன், கே.ஆறுமுகம், ஜான் (எ) பொன்னுசாமி, எம்.ஆர். ஶ்ரீதர், க.சம்பத், எம்.முரளிதரன், எஸ்ராமஜெயம், ஏ. சசிதர், எல்.சிவய்யா, டில்லி சங்கர், டி.சஙகர், எஸ்.சிவ சங்கர், ஜெ.சிவாஜி, விஜய பிரசாத், ஆர்.கே.தினகரன், எம்.ஆனந்தன்,

என்.எஸ்.சுப்பிரமணி, இரா.அப்புன், விஜி, டி.பி. புரம், சீனிவா சன், பி.எஸ். சீனிவாசன், வெங்கடேசன், எம்.ரஹீம், மோகன்பாபு, கோகுல், கே. பழனிச்சாமி, சிராய்தின், ராஜா, எம்.சீனு. பார்த்திபன், சாதிக்பாஷா, சந்தோஷ், பாஸ்கர், மகளிரணி விஜயமாலா, ஜெயலலிதா, பிரபாவதி, நளாயனி, திரிபுர சுந்தரி மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# நாமக்கல் மாவட்டம் - புதுச்சத்திரத்தில் கால்நடை கிளை நிலையம்!

## பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

நாமக்கல் ஆக. 4 -

நாமக்கல் மாவட்டம் புதுச்சத்திரம் ஒன்றியம் கரடிப்பட்டி ஊராட்சி கொளத்துப்பாளையம் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடை கிளை நிலையத்தை நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராம லிங்கம் திறந்து வைத்தார்.

அதன்பிறகு மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவரின் நிதியிலிருந்து கொளத்துப்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு ரூ 2 லட்சம் மதிப்பீட்டில் மேஜை, நாற்காலிகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் அவருடன் புதுச்சத்திரம் தெற்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் ஜெயப்பிரகாஷ், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத் தலைவர் செந்தில் குமார், ஒன்றிய குழுத் துணைத் தலைவர் ராம்குமார், கரடிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் தங்கம்மாள் முத்துசாமி, துணைத் தலைவர் கிருஷ்ணவேணி, கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் மருதுபாண்டி, மண்டல இணை இயக்குனர் நடராஜன், கால்நடை மருத்துவக் கல்லூரி பேராசிரியர் கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் அசோகன், தர்மகர்த்தா சின்னத் தம்பி, கழக நிர்வாகிகள் துரைமுருகன், நல்லுசாமி, சம்பத், சண்முகம் மற்றும் கால்நடை மருத்துவர்கள், கழக சார்பு அணி நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத்தலைவர் அவர்களின் ஆணைப்படி, வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தலின்படி,தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழிகாட்டுதலுடன், பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பொ.துறிஞ்சிப்பட்டி அரசு மேல் நிலைப் பள்ளியில் 155 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது.பள்ளியின் தலைமையாசிரியர் ஆனந்தகுமார் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக்குழு உறுப்பினரும்,கழக ஒன்றிய கழக செயலாளருமான பி.எஸ். சரவணன், ஒன்றியக் குழு தலைவர் திருமதி.உண்ணாமலை குணசேகரன், ஒன்றியக் குழு உறுப்பினர் தாரணிராஜேஷ்,பி.பள்ளிப்பட்டி ஊராட்சிமன்றதலைவர் திருமலாதினேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.